# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
Website: www.tnlbo.tn.gov.in


**முன்னிலை : திரு மகேசன் காசிராஜன் இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 226/மா/2025
நாள் 25.07.2025

திரு.C.ஹரிபாபு
ஆவடி
முறையீட்டு மனுதாரர்

நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குநர்,
சென்னை
எதிர் மனுதாரர்

சென்னை–600 055, ஆவடி, மிட்டணமல்லி, ஹை ஸ்கூல் தெரு, கதவு எண் 21 என்ற முகவரியில் வசிக்கும் திரு. C. ஹரிபாபு என்பவரின் 02.12.2024 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 02.12.2024 அன்று பெறப்பட்டு 226/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது:

## ஆணை

சென்னை–600 055, ஆவடி, மிட்டணமல்லி, ஹை ஸ்கூல் தெரு, கதவு எண் 21 என்ற முகவரியில் வசிக்கும் திரு. C. ஹரிபாபு என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள குற்றச்சாட்டு மனுவுடன் லஞ்ச ஒழிப்புத் துறை இயக்குநர், ஆலந்தூர், சென்னை அவர்களுக்கு முகவரியிட்டு இம்முறை மன்றத்திற்கு நகலிடப்பட்ட மனுவில் கீழ்க்கண்ட புகாரினை தெரிவித்துள்ளார்:-

"நான் மேற்கொண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மை செயலாளர் திரு. கார்த்திகேயன், ஐஏஎஸ் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையத்தில் பணிபுரியும் நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குநர் திரு. விஜயகுமார் மீது ஊழல் லஞ்சம் புகார் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்குமாறு மனு.

ஊட்டி நகராட்சியில் பணிபுரிந்த ஆணையர் ஜகாங்கீர் பாஷா மீது நகராட்சி வார்டுகளில் விதிமுறைகள் மீறி கட்டிடங்கள் மற்றும் கட்டிட அனுமதி பெற மற்றும் வருவாய் பிரிவில் வரிவிதிப்பு வீட்டு வரி, வணிக வரி, தொழில் வரி போன்றவை லஞ்சம் வாங்குவதாக தொடர்ந்து லஞ்ச ஒழிப்பு துறைக்கு புகார் சென்ற அடிப்படையில் திரு.ஜகாங்கீர் பாஷா கண்காணித்து வந்த நிலையில் 10.11.2024 அன்று நீலகிரி மாவட்ட லஞ்ச ஒழிப்புத் துறை அதிகாரிகள் லஞ்சம் வாங்கும் போது திரு. ஜகாங்கீர் பாஷாவை லஞ்ச ஒழிப்புத் துறை அதிகாரிகள் கைது செய்தனர். அன்று லஞ்ச ஒழிப்புத் துறை அதிகாரிகள் முதல் தகவல் அறிக்கை பதிவு C 8040899 F.I.R. No.8/24 வழக்கு செய்தனர்.

நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை அதிகாரிகள் சார்பில் 11.11.2024 ROC 2217/2024/C1 ஊட்டி நகராட்சி ஆணையர் பொறுப்பில் இருந்து விடுவிக்கப்பட்டு காத்திருப்போர் பட்டியலில் வைக்கப்பட்டார். மீண்டும் அவசர அவசரமாக நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குநர் திரு. சி. விஜயகுமார் காத்திருப்பு பட்டியல் இருந்த ஜகாங்கீர் பாஷா அவர்களிடம் சி. விஜயகுமார் எனக்கு 20லட்சம் நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை கார்த்திகேயன் ஐ.ஏ.எஸ். 30 லட்சம் என்று பேரம் பேசி பிறகு மறைமுகமாக 50 லட்சம் லஞ்சமாக விஜயகுமார் வாங்கி கொண்டு அவசர அவசரமாக கோப்புகளை தயார் செய்து

The Director of Municipality Administration letter R.C. No.2217/2024/C1 12ம் தேதி அன்று பணியிடம் மாற்றம் செய்ய கோப்பை தயார் செய்து நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை அனுப்பி வைக்கப்படுகிறது.

நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மை செயலாளர் கார்த்திகேயன் ஐஏஎஸ் 25/11/2024 அன்று G.O. M1 (RT) NO திருநெல்வேலி மாநகராட்சி ASSISTANT Commissioner பணி மாறுதல் உத்தரவு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதில் 11–ம் தேதி அன்று லஞ்சம் வாங்கிய குற்றத்துக்காக திரு. ஜகாங்கீர் பாஷா பணியில் இருந்து விடுவிக்கப்பட்டார். உடனே 12ம் தேதி அன்று கோப்புகளை தயார் செய்து உள்ளனர். நீலகிரி லஞ்ச ஒழிப்புத் துறை அதிகாரிகள் திரு. ஜகாங்கீர் பாஷா 10/11/2024 அன்று லஞ்சப் பணத்துடன் 11 லட்சம் 70 ஆயிரம் ரூபாயுடன் சிக்கி கைது செய்யப்பட்டு ஊடகம் பத்திரிக்கை சமூக வலைத்தளங்கள் அரசியல் தலைவர்கள் பொது மக்கள் பரபரப்பாக பேசப்பட்டது.

திரு.ஜகாங்கீர் மீது துறை ரீதியாக நடவடிக்கை எடுக்காமல் நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குனர் விஜயகுமார் செயல்பட்டுள்ளார்.

தஞ்சாவூர் மாநகராட்சி பணிபுரிந்த ஆணையர் சரவணன் என்பவர் 2 ஆண்டு காலமாக சஸ்பெண்ட் செய்யப்பட்டு பணியில் இன்று வரை அமர்த்தவில்லை. இதுபோல் நகராட்சி துறையில் பலர் சஸ்பெண்ட் செய்து உள்ளார்கள்.

ஜகாங்கீர் மட்டும் எப்படி பணி மாறுதல் உத்தரவளித்தார்கள். இது போன்று தான் பூந்தமல்லி நகராட்சி ஆணையராக பணியாற்றிய போது லதா என்பவர் 23/11/2024 அன்று திருவள்ளூர் மாவட்ட லஞ்ச ஒழிப்புத் துறை அதிகாரிகள் பூந்தமல்லி நகராட்சி அலுவலகத்தில் சோதனை செய்யும் போது கணக்கில் வராத பணம் 2 லட்சம் ரூபாய் லஞ்ச பணம் மேல் இருக்கும். ரெக்கார்ட் ரூமில் பதுக்கி வைத்து இருந்ததை திருவள்ளூர் மாவட்ட லஞ்ச ஒழிப்புத் துறை அதிகாரிகள் சோதனையில் கண்டுபிடிக்கப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு C1 8165167 F.I.R. No.18/PC/2024/TVL திருவள்ளூர் மாவட்ட லஞ்ச ஒழிப்புத் துறை அதிகாரிகள் முதல் தகவல் அறிக்கை A1யாக ஆணையர் லதா அவர்கள் பெயர் சேர்க்கப்பட்டுள்ளது.

அப்படி இருக்கும் பட்சத்தில் 29/11/2024 அன்று பணியில் இருந்து காத்திருப்போர் பட்டியலில் பூந்தமல்லி நகராட்சி ஆணையர் லதா பெயர் வைக்கப்பட்டு இருந்தது. மீண்டும் A1 லஞ்சம் வாங்கிய முதல் குற்றவாளியாக ஆணையர் லதா அவர்களுக்கு நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குநர் சி. விஜயகுமார் 50 லட்சம் லஞ்சம் பணம் மறைமுகமாக பெற்றுக் கொண்டு லஞ்ச புகாரில் சிக்கிய லதா அவர்களுக்கு 2 தேதி இருந்து 20 தேதி வரை காலகட்டத்தில் பதவி உயர்வு மற்றும் ஈரோடு மாநகராட்சி Assistant Commissioner பணி மாறுதல் உத்தரவு பிறப்பித்துள்ளார்கள்.

இரண்டு ஆணையர் மீது லஞ்ச ஒழிப்புத் துறை புகார் மீது துறை ரீதியாக நடவடிக்கை எடுக்காமல் இருக்க மற்றும் பணியிட மாற்றம் செய்ததற்கு நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குநர் திரு. சி. விஜயகுமார் இரண்டு பேரிடம் ஒரு கோடி லஞ்சமாக வாங்கியுள்ளார். இதில் கார்த்திகேயன் ஐஏஎஸ்க்கு 50 லட்சம் பேரம் நடந்து விஜயகுமார் லஞ்சம் வாங்கியுள்ளார்.

திருவேற்காடு நகராட்சியில் பணிபுரியும் போது முன்னாள் ஆணையர் ஜகாங்கீர் பாஷா மீது திருவேற்காடு நகராட்சி காவல் நிலையத்தில் லஞ்சம் 10 லட்சம் வாங்கியது மாதம் 3,00,000 கேட்பதாகவும் புகார் மனு எண் 1823/2023 மனு பெறப்பட்ட தேதி 16/12/2023 நேரம் 21.45 ஜஹாங்கீர் பாஷா மீது நடவடிக்கை எடுக்காமல் இருக்க நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குநர் திரு. விஜயகுமார் 10 லட்சம் லஞ்சமாக பெற்றுள்ளார்.

இது மட்டும் இல்லாமல் கார்த்திகேயன் ஐஏஎஸ் பெயரை பயன்படுத்தி திருவேற்காடு நகராட்சி ஆணையராக இருந்த ஜகாங்கீர் பாஷா மற்றும் நகராட்சி நிர்வாக கூடுதல்

இயக்குநர் திரு. விஜயகுமார் இருவரும் சேர்ந்து கூட்டு களவாணியாக சேர்ந்து திருவேற்காடு நகராட்சி உள்ள கவுன்சிலர்களுக்கு லஞ்சம் பெற்றுக் கொண்டு சட்டத்திற்கு புறம்பாக டெண்டர் வழங்கியது 10 வார்டு கவுன்சிலர் கணவர் பெயரில் G.S. ENTERPRISES NO.80 Rajarathinam Nagar, திருவேற்காடு சென்னை–600 077 9வது வார்டு கவுன்சிலர் நாரமதகுமாரி கணவர் பரசு முத்து அவர் பிள்ளை மீது GARBAGE CLEARANCE நிறுவனத்தின் மூலம் பணிகளே செய்யாமல் 367285 ரூபாய் போலி பில்கள் Voucher Number EjV/015/23_24/RF/0000382 டிபிசி ஊழியர் என்ற பெயரில் போடப்பட்டுள்ளது.

1வது வார்டு கவுன்சிலர் சாந்தி கணவர் ராஜா என்ற பெயரில் S.R. WELDING Work boV vehicle body Welding Works EJV/015/23_24/RF/00000044 voucher Number ரூபாய் 594720 வேலைகள் செய்யாமல் பில்கள் போடப்பட்டுள்ளன. 13வது வார்டு கஞ்சா அவரது கணவர் இளையராஜா KPS TRAVELS Voucher Number EJA/015/23_24/RF/0000034 ரூபாய் 118708 பணிகள் செய்யாமல் பில்கள் போடப்பட்டுள்ளன.

10வது வார்டு கவுன்சிலர் கணவர் G.S. எண்டர்பிரைசஸ் வழங்கப்பட்ட பணி உத்தரவு எண் 2469/2023/எச்1 நாள் 5.9.2023 அறிவிப்பு நாள் 26.10.2023 பணிகள் செய்யாமல் திடக் கழிவு மேலாண்மை திட்டம் மூலம் சுமார் 3 கோடி முறைகேடுகள் செய்து பில்கள் போடப்பட்டுள்ளன.

இதன் மீது நடவடிக்கை எடுக்காமல் இருக்க நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மை செயலாளர் கார்த்திகேயன், ஐஏஎஸ் 1 கோடி தர வேண்டும் மற்றும் ஊட்டி நகராட்சி ஆணையராக பணிமாற்றம் செய்து தருகிறேன் என்று நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குநர் திரு. விஜயகுமார் மறைமுகமாக லஞ்சம் வாங்கியுள்ளார்.

காஞ்சிபுரம் மாநகராட்சியில் பணியாற்றிய முன்னாள் நகரமைப்பு ஆய்வாளர் திருமதி. S. சியாமளாலதா நகரமைப்பு பிரிவில் உள் கட்டமைப்பு நிதி 47 லட்சம் கையாடல் ஊழல் முறைகேடு தற்போது திருவனந்தபுரம் நகராட்சி திருவண்ணாமலை மாவட்டம் தற்போது பணிபுரிந்து வருகிறார். திருமதி சியாமலதா மீது காஞ்சிபுரம் லஞ்ச ஒழிப்புத் துறை அதிகாரிகள் வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக வழக்கு பதிவு C 8069004 F.I.R. No.06/AC/2024 5/8/2024 நாள் இதன் மீது துறை ரீதியாக நடவடிக்கை எடுக்காமல் இருக்க பணியிடம் மாற்றம் செய்யால் இருக்க திருமதி சியாமலதாவிடம் 1 கோடி கேட்டு மறைமுகமாக 60 லட்சம் லஞ்சம் வாங்கி உள்ளார்.

தாம்பரம் மாநகராட்சி நகரமைப்பு பிரிவு அலுவலர் திரு. சிவக்குமார் 25 வருடங்களாக சென்னை சுற்றி உள்ள பகுதிகளில் நகராட்சி மாநகராட்சி 25 வருடங்களாக பணியாற்றி வருகிறார். தாம்பரம் பல்லாவரம் போன்ற பகுதிகள் இயற்கை பேரிடர் மழைக்காலத்தில் தண்ணீரில் தாம்பரம் மாநகராட்சி சுற்றி உள்ள பகுதிகளில் முழுகாரணம் இவர்தான்.

சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் உறுப்பினர் அவர்களின் அதிகாரத்தின்படி நகராட்சி மாநகராட்சியில் அனுமதியற்ற கட்டிடங்கள் விதிமுறைகள் மீறி சட்டத்திற்கு புறம்பாக உள்ள கட்டிடங்கள் மீது நடவடிக்கை எடுக்க அதிகாரத்தை நகராட்சி மாநகராட்சி உள்ள அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

நகரமைப்பு அலுவலர் சிவக்குமார் மீது 2019/2/25 பல்லாவரம் நகராட்சியாக இருக்கும் போது சிவக்குமார் மற்றும் ஜெயந்தி என்பவர் பெயர் ஏ2வாக லஞ்ச ஒழிப்புத் துறையில் பெயர் உள்ளது. வழக்கு பதிவு செய்த விவரம் சி8093864 எப்.ஐ.ஆர், 6 தாம்பரம் மாநகராட்சியில் நகரமைப்பு பிரிவு அலுவலர் திரு. சிவக்குமார் 2021 முதல் 2023 வரை சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் உறுப்பினர் அவர்கள் அதிகாரம் நகராட்சி மாநகராட்சி அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டது. வழிகாட்டி முறைகள்படி கட்டிட அனுமதி உரிமம் அனுமதி வழங்க உள்ளாட்சி அமைப்புகள் வழங்கப்பட்டுள்ளது.

தாம்பரம் மாநகராட்சி பகுதிகளில் 2021 முதல் 2023 வரை கட்டிடங்கள் முறையாக கட்டிடங்கள் அனுமதி வழங்கவில்லை. அனுமதி வழங்கிய கட்டிடங்கள் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் விதிமுறைகள்படி அரசாணைப்படி கட்டிடங்கள் அடுக்குமாடி குடியிருப்புகள் சட்டத்திற்கு புறம்பாக கட்டப்பட்டுள்ளன.

1000 கட்டிடங்கள் முறைகேடு இது மட்டும் இல்லாமல் அனுமதி அற்ற கட்டிடங்கள் மற்றும் ஏரி, குளம், ஆறு, வண்டி பாட்டை, புறம்போக்கு இடங்களில் சட்டத்திற்கும் புறம்பாக 500 கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளது. இதன் மீது நடவடிக்கை எடுக்காமல் இருக்க ஆய்வு செய்யாமல் இருக்க நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குனர் திரு. விஜயகுமார் 1 கோடி லஞ்சமாக பெற்று உள்ளனர். தாம்பரம் மாநகராட்சி நகரமைப்பு பிரிவில் ஆய்வு செய்யாமல் இருக்க நடவடிக்கை எடுக்காமல் இருக்க கார்த்திகேயன் ஐஏஎஸ் அதிகாரி பெயரில் 20 லட்சம் மாதம் மாதம் லஞ்சம் வாங்கி வருகிறார்.

இதுபோல் ஆவடி மாநகராட்சி, காஞ்சிபுரம் மாநகராட்சி, வேலூர் மாநகராட்சி, திருவேற்காடு நகராட்சி, மறைமலைநகர் நகராட்சி, பூந்தமல்லி நகராட்சி, திருவள்ளூர் நகராட்சி, திருநின்றவூர் நகராட்சி, தமிழ்நாடு முழுவதும் ஐஏஎஸ் அதிகாரி பெயரை சொல்லி ஆய்வு என்ற பெயரில் பல அதிகாரிகளை மிரட்டி பயமுறுத்தி பணியிட மாற்றம் செய்து விடுவேன் என்று மிரட்டி பணம் பறித்து வருகிறார் நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குநர் விஜயகுமார்.

அரக்கோணம் நகராட்சியில் பணிபுரியும் உதவி செயற்பொறியாளர் திரு. செல்வக்குமார் மீது வேலூர் மாவட்ட லஞ்ச ஒழிப்புத் துறை அதிகாரிகள் வழக்கு பதிவு தேதி 12/11/2021 எப்.ஐ.அர் எண் 20/2021 C8044400 வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக 23 லட்சம் 170 சவரம் நகைகள் மற்றும் ஆவணங்கள் கைப்பற்றப்பட்டது. பொறியாளராக இருந்த செல்வகுமார் பதவி உயர்வு உதவி செயற் பொறியாளர் ஆக பதவி உயர்வு G.O.(D) No.434 தேதி 28/07/2023 G.O.(D) No.415 Municipal Administration and Water Supply (ME3) Department Date 20.07.2023 From the Director of Municipal Administration Letter Roc. number 676/2023/GA2 date 21.07.2023 உதவி செயற் பொறியாளர் திரு. செல்வக்குமாருக்கு பதவி உயர்வு மற்றும் லஞ்ச ஒழிப்புத் துறையில் வழக்கு சம்பந்தமாக துறை ரீதியான நடவடிக்கை எடுக்காமல் மற்றும் பதவி உயர்வு கோப்புகள் தவறுகள் இருந்தால் சரி செய்து தந்ததற்கு நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குனர் விஜயகுமார் 50 லட்சம் மறைமுகமாக லஞ்சம் வாங்கியுள்ளார். இது போல் தமிழ்நாடு முழுவதும் பொறியாளர் பிரிவில் பதவி உயர்வு அளித்ததில் 28/07/2023 அன்று சுமார் நகராட்சி மாநகராட்சி பணிபுரியும் பொறியாளர் பிரிவில் 50 நபர்களுக்கு ஒரு நபர்களிடம் 30 லட்சம் என்று 15 கோடி லஞ்சமாக வசூல் செய்து உள்ளார். நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குனர் விஜயகுமார் தமிழ்நாடு முழுவதும் நகராட்சி மாநகராட்சிகளில் சீனியராக பலர் இருந்தும் அவர்களுக்கு தரவில்லை 50 நபர் மீது பொறியாளர் பிரிவில் குற்றச்சாட்டு இருந்தும் பதவி உயர்வு வழங்கும் போது குற்றம் மறைத்து நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குனர் திரு. விஜயகுமார் பதவி வழங்கி உள்ளார்.

ஆவடி மாநகராட்சி நகரமைப்பு பிரிவில் பணிப்புரியும் திரு. வி. முருகன் உதவி பொறியாளர் என்பவருக்கு பதவி உயர்வு வழங்கியதில் முறைகேடு.

முருகன் மீது பண்ருட்டி நகராட்சியில் நகரமைப்பு ஆய்வாளராக மற்றும் கூடுதல் ஆணையர் பொறுப்பு இருந்த போது உள்ளாட்சி துறையில் குற்றச்சாட்டு எழுப்பிய தடை தணிக்கை துறை அதிகாரிகள் குற்றச்சாட்டு எழுப்பி பத்தி மற்றும் பண்ருட்டி நகராட்சியில் பணி நியமன முறைகேடு நேரடியாக நகரமைப்பு ஆய்வாளர் பதவி பண்ருட்டி நகராட்சியில் உத்தரவு ஆணை வழங்கப்பட்டுள்ளன.

2000–2006 அன்றைய காலகட்டத்தில் தின கூலி பணியாளராக பணிபுரியும் ஊழியர்களை கடைநிலை ஊழியராக பணி அமர்த்துமாறு நகராட்சி நிர்வாக சார்பில் உத்தரவு இடப்பட்டது. ஆனால் முருகன் நகராட்சியில் தினக்கூலி பணியாளராக கூட

பணியில் இல்லாமல் அதிகாரத்தை பயன்படுத்தி லஞ்சம் கொடுத்து நேரடியாக நகரமைப்பு ஆய்வாளர் பதவி வழங்கப்பட்டது. இந்த குற்றச்சாட்டு மீது பண்ருட்டி நகராட்சியில் தணிக்கை துறை பத்தி குற்றச்சாட்டு உள்ளது. இவரை கடைநிலை ஊழியராக பணி அமர்த்துமாறு உள்ளன. எப்படி பதவி உயர்வு வழங்கப்பட்டது. ஆத்தூர் நகராட்சியில் இருந்த முருகன் திருவேற்காடு நகராட்சிக்கு முருகன் பணி மாறுதல் செய்ய விஜயகுமார் சிபாரிசு மூலம் லஞ்சம் கொடுத்து திருவேற்காடு நகராட்சிக்கு வந்தார். மூன்றே மாதத்தில் பல்லாவரம் நகராட்சிக்கு மாறுதல் ஆகிறார். மீண்டும் ஒரே மாதத்தில் தாம்பரம் நகராட்சி ஊழியராக நகரமைப்பு ஆய்வாளராக இருந்த முருகன் மாநகராட்சி உதவி பொறியாளராக தாம்பரம் மாநகராட்சி பதவி உயர்வு வழங்கி ஆவடி மாநகராட்சிக்கு மாற்றம் செய்கிறார் விஜயகுமார் பல லட்சங்களை வாங்கி கொண்டு முருகன் அவர்களுக்கு பரிசு மற்றும் முறைகேடாக பதவி வழங்கியுள்ளார்.

ஆவடி மாநகராட்சியில் சேமநல நிதி $4^1/_2$ கோடி பணம் கையாடல் செய்ததாக லஞ்ச ஒழிப்புத் துறை விசாரணை செய்து $4^1/_2$ கோடி பணம் முறைகேடு உறுதி செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையரகத்துக்கு கோப்புகள் நடவடிக்கை எடுக்குமாறு அனுப்பி இருந்தது. அந்தக் கோப்புகளை மறைத்து விட்டு விஜயகுமார் உதவி பொறியாளராக இருந்த சத்தியசீலன் என்பவருக்கு பொறியாளர் பதவி வழங்கியுள்ளார். இதில் பல லட்சங்கள் பணம் விஜயகுமாருக்கு கைமாறி உள்ளன. இது மட்டும் இல்லாமல் 4 கோடி ஊழல் மீது நடவடிக்கை எடுக்காமல் இருந்துள்ளார் விஜயகுமார்.

பூந்தமல்லி நகராட்சி ஆணையர் லதா அரக்கோணம் நகராட்சி ஆணையராக இருந்த போது பாதாள சாக்கடை 4000 இணைப்பு லஞ்சம் வாங்கிக் கொண்டு சட்டத்திற்கு விரோதமாக இணைப்புகள் வழங்கியுள்ளார். அவருக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டு பூந்தமல்லி நகராட்சி மாற்றம் செய்தார் விஜயகுமார்.

பூந்தமல்லி நகராட்சி முன்னாள் ஆணையர் லதா & நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குநர் மாதம் வரி விதிப்பு சம்பந்தமாக கலந்துரையாடல் & ஆய்வு செய்யாமல் வரிவிதிப்பு செய்ததில் முறைகேடு இருந்து நடவடிக்கை எடுக்காமல் கையூட்டு பெற்றுக் கொண்டு ஆணையர் மீது நடவடிக்கை எடுக்கவில்லை.

<u>ASSESSMENT NOS</u>.

1) "010/002/900100 – 010/830" (ANNAPATICAL ASPITALITY)
2) "010/002/900164 – 010/894" (NANCIL FACILITYIES PRIVATE LIMITED)
3) "010/002/900167 – 010/897" (VST MOTORS)
   "010/002/900168 – 010/898" (VST MOTORS)
4) "010/002/902088" – (SIMPSON AND CO)
5) "010/002/902088" – (BHARAT PETROLEUM CORPORATION)
6) "010/002/901473 – 010/002/01120" (JOHNSON LIFTS PRIVATE LIMITED)
   "010/002/901473 – 010/002/01121"
7) "010/002/901462 – 010/002/01108" (TEXCEL ENGINEERS PVT LTD)
8) "010/002/901111 – 010/002/00758" (DOOSAN POWER SYSTEMS INDIA PVT LTD)
9) "010/002/901106 – 010/002/00755" (VST MOTORS PVT LTD)
10) "010/002/901052 – 010/002/00700" (R.R.B. ENERGY LTD)
11) "010/002/901053 – 010/002/00701" (JOHNSON LIFT LTD)
12) "010/002/900597 – 010/14695" (SOUTHERN ROADWAYS LTD)
13) "010/002/900590 – 010/14688" (POWER TECH ENGINEERS)
14) "010/002/900573 – 010/14670" (M/S KUN COMMERCIAL VEHICLES PVT LTD)
15) "010/002/900563 – 010/14658" (FARIDA SHOES PVT LTD)
16) "010/002/900518 – 010/13127" (FARIDA SHOES PVT LTD)
17) "010/002/900507 – 010/11603" (TRIVITRON DIAGNOSTICS PVT LTD)
18) "010/002/900508 – 010/9520" (JOHNSON LIFT LTD)
19) "010/002/900413 – 010/930" (ENRICA ENTERPRISES PVT LTD)
20) "010/002/900414 – 010/931" (ENRICA ENTERPRISES PVT LTD)
21) "010/002/900415 – 010/932" (ENRICA ENTERPRISES PVT LTD)
22) "010/002/900416 – 010/933" (SUNDHARAM MOTORS)
23) "010/002/900417 – 010/934" (SUNDHARAM MOTORS)

24) "010/002/900194 – 010/925" (KERALA TRANSPORT)
25) "010/002/900177 – 010/908" (DOOSAN POWER SYSTEMS INDIA PVT LTD)
26) "010/002/900178 – 010/909" (DOOSAN POWER SYSTEMS INDIA PVT LTD)
27) "010/002/900171 – 010/902" (SHREE SANCHETI MOTORS PVT LTD)
28) "010/002/900165 – 010/895" (G.S.K. VELU)
29) "010/002/901311 – 010/002/00850" (SAYONI DUTTA AND MANJU DATTA)
30) "010/002/902089" – (GUHAN J.K.)
31) "010/002/902090" – (VARADHAMOHAN)
32) "010/002/902092" – (JAI SAKTHI)
33) "010/002/902093" – SACHIN SANDEEEP SIDDHARTH)
34) "010/016/900020–010/10223"(J.C.ROOBAN CORRESPONDENT TBM SCHOOL)

நகராட்சி & மாநகராட்சி வருவாய் பிரிவில், ஆவடி மாநகராட்சி, திருவேற்காடு நகராட்சி, பூந்தமல்லி நகராட்சி, மாங்காடு, குன்றத்தூர் நகராட்சி, தாம்பரம் மாநகராட்சி, மறைமலைநகர் நகராட்சி & தமிழ்நாட்டில் உள்ள நகராட்சி & மாநகராட்சி வணிக வளாகங்கள் தொழில் வரி, வீடுகளுக்கு, அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு, வரிவிதிப்பு செய்யாமல் & வரிவிதிப்பு செய்த கட்டிடங்களுக்கு வரி குறைக்கப்பட்டு நகராட்சி கூடுதல் இயக்குநர் திரு. விஜயகுமார் & நகராட்சி மண்டல இயக்குநர், நகராட்சி ஆணையர் மாதம் கலந்தாய்வு வரிவிதிப்பு சம்பந்தமாக ஆலோசனை கூட்டம் 2021–2024 வரை நடந்த வருவாய் அதிகாரிகள் மூலம் வரிவிதிப்பு குறைத்து நகராட்சி மாநகராட்சி சுமார் ரூ.10 கோடி இழப்பீடு நடந்துள்ளது. ஊழல் முறைகேடு மீது வருவாய் பிரிவு அதிகாரிகள் நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குனர் திரு. விஜயகுமார் & நகராட்சி மண்டல இயக்குநர், நகராட்சி ஆணையர் சேர்ந்து ஊழல் முறைகேடு லஞ்சம் வாங்கி உள்ளார்கள்.

திருநின்றவூர் நகராட்சியில் நகரமைப்பு பிரிவில் பணிபுரியும் நகரமைப்பு ஆய்வாளர் இலட்சுமி நாராயணன் என்பவர் திருவள்ளூர் மாவட்ட லஞ்ச ஒழிப்பு துறையில் & ஆலந்தூர் உள்ள லஞ்ச ஒழிப்பு துறை தலைமை அலுவலகத்தில் நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குநர் மீது ஊழல் முறைகேடு சம்பந்தமாக புகார் கொடுத்து உள்ளார்.

ஆவடி மாநகராட்சியில் திரு. அப்துல் ஜாபர் சுகாதார ஆய்வாளர் கூடுதல் பொறுப்பு இருந்த காலத்தில் ப்ளீச்சிங் பவுடர் எத்தனை மூடைகள் வாங்கப்பட்டது. அந்த நிறுவனத்தின் பெயர் & முகவரி தருக. ஒரு மூட்டையின் விலை எவ்வளவு, எத்தனை மூட்டைகள் வாங்கப்பட்டது. சுண்ணாம்பு, லைசால், பெனாயில் கொள்முதல் செய்யப்பட்ட விவரம், நிறுவனம் பெயர் & முகவரி தருக. சுண்ணாம்பு எத்தனை மூட்டைகள் கொள்முதல் செய்யப்பட்டது. லைசால், பினாயில் எத்தனை லிட்டர்கள் கொள்முதல் செய்யப்பட்டது. அதன் நிறுவனத்தின் பெயர் & முகவரி தருக. ஒரு லிட்டர் பினாயில் & லைசால் விலை எவ்வளவு எத்தனை லிட்டர் கொள்முதல் செய்யப்பட்டது.

கொரானா காலத்தில் கொரானா பாதிக்கப்பட்டவர் பெயரில் அவர்களை தனிமைபடுத்தி உணவு, அன்றாட தேவையான பொருட்கள், தலையணை & போர்வைகள் கொள்முதல் செய்யப்பட்ட நிறுவனம் & பெயர் முகவரி தனித்தனியாக விவரம்.

ஆர்சினிக்ஆல்பம், ஹோமியோபதி மாத்திரை எத்தனை கொள்முதல் செய்யப்பட்டது. ஒன்றின் விலை எவ்வளவு மொத்தம் கொள்முதல் செய்யப்பட்ட விலை விவரம் & நகல்கள் தருக. கொள்முதல் செய்யப்பட்ட நிறுவனத்தின் பெயர், முகவரி தவறாக உள்ளது. முகவுறை, கையுறை, சானிடைசர் ஆகிய பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்ட நிறுவனத்தின் பெயர், முகவரி & விலை விவரம் தருக. முகவுறை எத்தனை வாங்கப்பட்டது. ஒன்றின் விலை எவ்வளவு. மொத்தம் விலை எவ்வளவு. ஒன்றின் கையுறை எவ்வளவு மொத்தம் விலை தருக. சானிடைசர் எத்தனை லிட்டர் கொள்முதல் செய்யப்பட்டது. கொரோனா பாதித்தவர்கள் தனிமைப்படுத்தி ஏற்றி செல்லும் வாகனங்களின் வாடகை விலை, நிறுவனத்தின் பெயர், முகவரி வண்டியின் எண் தருக. கொரானா பாதிக்கப்பட்ட பகுதியில் தடை செய்யப்பட்ட பகுதியில் தகரம் சீட் & பேனர்களுக்கு எவ்வளவு செலவு செய்யப்பட்டுள்ளது. அதன் ஒப்பந்ததாரர்கள் பெயர் & முகவரி தருக. ஒரு தகர சீட், பெனர்ட் எவ்வளவு கொரேனா

காலத்தில் தடை செய்யப்பட்ட பகுதியில் அன்றாட தேவையான பொருட்கள் & கிருமிநாசினி தெளித்தவர்கள் விவரம் & செலவு செய்த விவரம் தருக. கொரோனா காலத்தில் கபசுரக் குடிநீர் காய்ச்சி வழங்கிய டிரம்கள் & அதன் உரிமையாளர்களின் பெயர் & முகவரி ஒரு டிரம்மின் விலை எவ்வளவு எத்தனை டிரம்கள் கொள்முதல் செய்யப்பட்டது.

ஆவடி மாநகராட்சியில் திரு. அப்துல் ஜாபர், சுகாதார ஆய்வாளர் அவர்கள் கூடுதல் பொறுப்பு இருந்த காலத்தில் கொரானா காலத்தில் முறைகேடு நடந்துள்ளது. அந்த ஊழல் மீது நடவடிக்கை எடுக்காமல் ரூ.50 லட்சம் வாங்கி கொண்டு திரு. அப்துல் ஜாபர் அவர்களுக்கு சுகாதார அலுவலர் ஆக பதவி உயர்வு அளித்துள்ளார் நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குனர் விஜயகுமார்.

2015 முதல் 2024 வரை லஞ்ச ஒழிப்புத் துறை அதிகாரிகள் வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குனரகம் துறை ரீதியாக நடவடிக்கை எடுக்குமாறு அறிக்கை அனுப்பி வைத்தது மூலம் நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குனர் நடவடிக்கை எடுக்காமல் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் லஞ்சம் பெற்றுள்ளார்.

இதுமட்டுமல்லாமல் 2021 முதல் 2024 வரை லஞ்ச ஒழிப்புத் துறை அதிகாரிகள் அலுவலகத்திற்கு பொதுமக்கள் புகார் மனு கொடுத்ததின் பேரில் லஞ்ச ஒழிப்புத் துறை அலுவலகத்தில் இருந்து நகராட்சி நிர்வாக இயக்குனரகம் அலுவலகத்திற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவிப்பு கடிதம் அனுப்பி வைப்பார்கள்.

லஞ்ச ஒழிப்புத் துறை அறிவிப்பு கடிதம் துறை ரீதியாக நடவடிக்கை எடுக்குமாறு அனுப்பியது மீது நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குநர் விஜயகுமார் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் நடவடிக்கை எடுக்காமல் இருக்க லஞ்சம் பெற்றுள்ளார்.

உள்ளாட்சி அமைப்புகள் முறை மாமன்ற நடுவம் மூலம் பொது மக்கள் சமூக ஆர்வலர்கள் நகராட்சி மற்றும் மாநகராட்சி நடைபெறும் பணிகள் முறைகேடு லஞ்சம் மற்றவை சம்பந்தமாக புகார் மனு கொடுப்பார்கள்.

உள்ளாட்சி அமைப்புகள் முறை மாமன்றம் நடுவம் மூலம் விசாரணை செய்து நகராட்சி நிர்வாக இயக்குனரகம் அலுவலகத்திற்கு அறிக்கை உத்தரவு நடவடிக்கை எடுக்குமாறு அனுப்பி வைப்பார்கள். 2017 முதல் 2024 வரை அனுப்பிய உத்தரவு மீது நடவடிக்கை எடுக்காமல் நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குனர் விஜயகுமார் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை வரவழைத்து போன் மூலம் தொடர்பு கொண்டு லஞ்சம் பெற்றுக் கொண்டு சம்பந்தப்பட்ட உத்தரவு மீது உள்ள நபர்களிடம் லஞ்சம் மறைமுகமாக வாங்கியுள்ளார்.

இது மட்டும் இல்லாமல் 2021 முதல் 2024 நகராட்சி மாநகராட்சி பணியாளர்கள் பணி மாறுதல் பணியிடம் மாற்றம் செய்ததில் யார் பணம் தருகிறார்களோ அவர்களுக்கு முன்னுரிமை அளித்து கடந்த மூன்று ஆண்டுகளில் சுமார் 20 கோடி லஞ்சமாக பெற்றுள்ளார்.

பொறியாளர் பிரிவில் இடம் மாற்றம் செய்ய 50 லட்சம் வருவாய் பிரிவு இடமாற்றம் செய்ய 20 லட்சம் சுகாதார பிரிவில் இடமாற்றம் செய்ய 15 லட்சம் நகரமைப்பு பிரிவு அதிகாரி இடமாற்றம் செய்ய 40 லட்சம் யார் யார் லஞ்சம் தருகிறார்களோ அவர்களுக்கு முன்னுரிமை அளித்து கோப்புகளை எடுத்து குறித்து இவர் மூலம் நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அனுப்பி வைப்பார். லஞ்சம் தாரத அதிகாரிகள் கோப்புகளை முடக்கம் செய்வார்.

நகராட்சி மாநகராட்சி ஊழியர்கள் இரண்டு நபர்கள் இதனால் இறந்து விட்டார்கள். 100க்கும் மேற்பட்டவர்கள் மன உளைச்சல் ஏற்பட்டுள்ளார்கள். இதெல்லாம் நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குநர் மூலம் ஆணையர் மற்றும் நகராட்சி மண்டல இயக்குனர் மாநகராட்சி போன்ற அதிகாரிகள் மூலம் ஆய்வு என்ற பெயரில் மாதம் மாதம் லஞ்சம் தர வேண்டும். லஞ்சம் தரவில்லை என்றால் அவர்களை உடனே இடமாற்றம் செய்வது ஹிட்லர் எப்படி நடத்துவாரோ அது போல் செய்வார்.

நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குனர் திரு. விஜயகுமார் ஆய்வுக்கு வரும்போது சொகுசு விமானம் மூலம் நட்சத்திர ஓட்டலில் ரூம் போட்டு தர வேண்டும். சகல வசதிகள்

செய்து தர வேண்டும். ஆணையர்களை மண்டல இயக்குனர்களை மிரட்டி இது போன்ற சட்டத்திற்கு புறம்பான தவறான செயல்களை செய்து வருகிறார்.

நகராட்சி மாநகராட்சி பணிபுரியும் பணியாளர்களிடம் இது சம்பந்தமாக லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரிகள் ஒரு குழு அமைத்து விசாரணை செய்தால் பல உண்மைகள் வெளிச்சத்திற்கு வரும் ஆதாரங்கள் கிடைக்கும் பல அதிகாரிகள் வெளியில் சொல்ல முடியாமல் நிலைமையில் மன உளைச்சல் ஏற்பட்டுள்ளார்கள்.

லஞ்ச ஒழிப்புத் துறை அதிகாரிகள் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் ஒரு குழு அமைத்து நகராட்சி மற்றும் மாநகராட்சி பணிபுரியும் பெண் பணியாளர்களிடம் விசாரணை செய்தால் பாலியல் துன்புறுத்தல்கள் வெளியில் சொல்லாமல் தத்தளித்து வருகின்றார்கள். நகராட்சி நிர்வாகக் கூடுதல் இயக்குநர் விஜயகுமார் மீது என் புகார் மீது லஞ்ச ஒழிப்புத்துறை இயக்குனர் ஒரு நேர்மையான எஸ்.பி. அமைத்து விசாரணை செய்யுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.'' என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 05.02.2025 நாளிட்ட கடிதத்தின் மூலம் நகராட்சி நிர்வாக இயக்குநரிடம் கோரப்பட்டது.

3. நகராட்சி நிர்வாக இயக்குநர் தனது 01.04.2025 நாளிட்ட கடிதம் ந.க.எண்.5124/2025/சி1–ன் அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:

''மனுதாரரின் புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள திரு. ஜஹாங்கிர் பாஷா மற்றும் திருமதி லதா ஆகிய சிறப்பு நிலை நகராட்சி ஆணையர்களின் பதவி உயர்வு மற்றும் பணியிட மாற்றம் ஆகியன நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் பரிந்துரைப்படி அரசாணை பிறப்பிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேற்கண்ட இரண்டு அலுவலர்கள் பணியிட மாற்றம் / பதவி உயர்வு தொடர்பாக கூடுதல் இயக்குநர் எந்த தனிப்பட்ட முடிவும் எடுப்பதற்கான அதிகாரம் இல்லை. மேலும், மேலே குறிப்பிட்டுள்ள இரண்டு அலுவலர்களின் பதவி உயர்வு/பணிமாறுதல், விதிமுறைகள் பரிசீலிக்கப்பட்டே மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்கண்ட நிகழ்வுகளில் கோப்புகளை கையொப்பம் இடுவதை விட ஆணை பிறப்பிப்பதற்கோ, முடிவெடுப்பதற்கோ கூடுதல் இயக்குநர் அவர்களுக்கு தனிப்பட்ட அதிகாரமோ அல்லது பொறுப்போ எதுவுமில்லை. நகராட்சி நிர்வாக இயக்குநரக அலுவலகத்தில் பெறப்படும் தபால்கள் முறையாக தபால் பிரிவில் பெறப்பட்டு சம்பந்தப்பட்ட பிரிவு எழுத்தருக்கு அனுப்பி வைக்கப்பட்டு பின்னர் பிரிவு எழுத்தரால் மேற்படி பெறப்பட்ட தபால்கள் கோப்புகளாக தயார் செய்யப்பட்டு, கண்காணிப்பாளரால் கையொப்பமிடப்பட்டும், பின்னர், இணை இயக்குநர் (நிர்வாகம்) அல்லது இணை ஆணையர் (நிர்வாகம்) அவர்களால் கையொப்பமிடப்பட்டு, அதன் பிறகே கூடுதல் இயக்குநர் அவர்களின் கையொப்பமிடப்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கோப்பின் மீது முடிவெடுத்து ஆணை வழங்கிட அனுப்பி வைக்கப்படும். மேலும் மேற்படி கோப்பின் மீது அரசால் இறுதி செய்யப்பட வேண்டிய கருத்துருக்கள் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் அரசுக்கு பரிந்துரை செய்து அனுப்பி வைக்கப்படும். நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் பரிந்துரையின்படி மேற்கண்ட இரண்டு அலுவலர்களின் பணி மாறுதல் / பதவி உயர்வு சம்பந்தமான அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளன. (அரசாணை (Rt) எண் 240, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.1) துறை, நாள் 25.11.2024 மற்றும் அரசாணை (D) எண் 578, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.1) துறை, நாள் 24.10.2024.)

மனுதாரர் மனுவில் நகராட்சி மற்றும் மாநகராட்சியில் நடைபெறும் பணிகள் தொடர்பாகவும் நடவடிக்கை தொடர்பாகவும் எல்லாவற்றிக்கும் கூடுதல் இயக்குநர் அவர்களை பொறுப்பாக்கி புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாநகராட்சி / நகராட்சிகளில் ஆணையர்களால் மேற்கொள்ளப்படும் பணிகள் மற்றும் நடவடிக்கைகள் அனைத்து சட்டம் மற்றும் விதிகளின்படி ஆணையருக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின்படி மேற்கொள்ளப்படும்

நடவடிக்கைகள் ஆகும். மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் ஆணையர்கள் மற்றும் பிற அலுவலர்கள் / பணியாளர்கள் அவர்களது கடமைகள் / பணிகள் செயல்படுத்துவது தொடர்பாக வீண் பழி சுமத்தி புகார் அளிக்கப்பட்டுள்ளதே தவிர இப்புகாரில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் அனைத்தும் அடிப்படை ஆதாரமற்றவை மற்றும் உண்மைக்குப் புறம்பாக புனைக்கப்பட்டவை என்பது தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

நகராட்சி மற்றும் மாநகராட்சி பணியாளர்களை பணி மாறுதல் செய்யும் அதிகாரம் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு மட்டுமே உள்ளது. அதே போன்று உயர்நிலை பதவிகளாக இருந்தால் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டு அரசாணை பிறப்பித்து பதவி உயர்வு மற்றும் பணியிடமாறுதல் வழங்க இயலும் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மனுதாரர் புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குநர் அவர்கள் நகராட்சி / மாநகராட்சி அலுவலர்கள் / பணியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்குவதற்கோ மற்றும் பணியிடமாறுதல் செய்வதற்கோ எந்தவித அதிகாரமும் இல்லை என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மனுதாரரது இதே புகார் தொடர்பாக 16.12.2024 அன்று நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் மனுதாரரிடம் நேரடி விசாரணை நடத்த அறிவிப்பு வழங்கப்பட்டும், மனுதாரர் மேற்படி விசாரணையில் கலந்து கொள்ளாததோடு, அன்னாருடைய புகார் தொடர்பான எந்த ஆதாரமும் சமர்ப்பிக்கவில்லை. எனவே நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க. எண். 33247/2024/சி1 நாள் 24.12.2024 வாயிலாக மனுதாரரின் இதே புகார் மனு நிராகரிக்கப்பட்டு பதிலளிக்கப்பட்டுள்ளது.

மேலும், மனுதாரரின் மனுவில் கோப்பு எண் மற்றும் கோப்புகளில் காணப்படும் சில விவரங்கள் அப்படியே எழுதப்பட்டிருப்பதிலிருந்து அலுவலகக் கோப்புகளில் காணப்படும் சில விவரங்கள் இத்துறையைச் சார்ந்த அலுவலர்களால் மறைமுகமாக எடுக்கப்பட்டு, அடிப்படை ஆதாரம் எதுவுமின்றி புகார் மனு தயார் செய்யப்பட்டு, திரு. C.ஹரிபாபு பெயரில் அன்னாரின் கையொப்பத்துடன் தொடர்ந்து அனுப்பி வைக்கப்பட்டு வருகிறது. கூடுதல் இயக்குநர் முனைவர் செ. விஜயகுமார் அவர்கள் மீது புகார் தெரிவித்து அனுப்பப்படும் மனுக்கள் பரிசீலனை செய்ததில் இப்புகார் மனுக்கள் அனுப்ப திரு.C.ஹரிபாபு அவர்கள் இத்துறை அலுவலர்களால் தூண்டப்பட்டு செயல்படுகிறார் என தெரிகிறது.

திரு.C.ஹரிபாபு அவர்கள் அனுப்பியுள்ள புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள புகார் அடிப்படை ஆதாரமற்றது எனவும், உண்மைக்குப் புறம்பானது எனவும், இப்புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் புனையப்பட்டது எனவும், இத்துறையைச் சார்ந்த சில அலுவலர்கள் கூடுதல் இயக்குநர் மீதான காழ்ப்புணர்ச்சியின் காரணமாக புகார் மனு தயார் செய்து திரு.C.ஹரிபாபு என்பவரது கையொப்பம் மற்றும் முகவரியில் அனுப்பப்படுவதாக சந்தேகிக்கப்படுகிறது என்பதும் Thiru C. Haribabu is a habitual paid petition writer என்பதும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே, திரு.C.ஹரிபாபு அவர்கள் அனுப்பியுள்ள மனுவில் தெரிவித்துள்ள அடிப்படை ஆதாரமற்ற புகார் மனுவினை நிராகரிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.'' என தெரிவித்துள்ளார்.

4. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநரின் அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

மனுதாரர் திரு.C.ஹரிபாபு தன்னுடைய மனுவில் நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குனராக பணிபுரியும் திரு.விஜயகுமார் மீது பல்வேறு குற்றச்சாட்டுகளை தெரிவித்துள்ளார்.

2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின் நோக்கமானது,–

"An Act to provide for the establishment of Ombudsman for conducting enquiry on the allegations against the elected members of the local bodies and the officers and employees working under the local bodies in the State of Tamil Nadu and for matters connected therewith and incidental thereto."

மேலும், மேற்படி சட்டத்தின், பிரிவு 2(7)–ல் உள்ளாட்சி அமைப்பு என்பதன் பொருள் வரையறை பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

xxx xxx

2.(7) "local body" means.-

(i) the Municipal Corporation of Chennai, Madurai, Coimbatore, Tiruchirapalli, Tirunelveli, Salem, Tiruppur, Erode, Vellore, Thoothukudi, Thanjavur, Dindigul or any other municipal corporation that may be constituted under any law for the time being in force; or

(ii) a Municipal Council constituted under the Tamil Nadu District Municipalities Act, 1920; or

(iii) a District Panchayat constituted under the Tamil Nadu Panchayats Act, 1994.

எனவே, நகராட்சி நிர்வாக இயக்குநரகம், மேற்கண்ட சட்டப்பிரிவின் வரம்பிற்குள் உட்படாததால், மனுதாரரின் மனு மீது இம்முறைமன்ற நடுவம் நடவடிக்கை எடுக்க வழிவகையில்லை என முடிவு செய்து இம்முறைமன்ற நடுவம் அவ்வாறே ஆணையிடுகிறது.

2025-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 25-ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. C. ஹரிபாபு,
எண் 21, ஹை ஸ்கூல் தெரு, மிட்டணமல்லி,
ஆவடி, சென்னை–600 055.

(2) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

(3) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவர் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.